முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில்
ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால
பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**சோபகிருது வருடம் பங்குனி மாதம் 11 திகதி முதல்**
**சோபகிருது வருடம் பங்குனி மாதம் 18 திகதி வரை**
**(24.03.2024 ஞாயிறு முதல் 31.03.2024 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறமோடு மக்கள் வாழவே
ஆன்மீக ஞான வழிகாட்டி
வரமோடு ஞானமும் அருளுகின்ற
வள்ளலே வாழும்ஞானியே அரங்கனே
2. அரங்கனே உன்அவதாரப் பெருமைகூறி
அறிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
வரங்களென சோபகிருது சேல்திங்கள்
வல்லமைபட லாபதிகதி மேல் மூவாறு திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
வழங்குவேன் இந்தியா தமிழகத்தில்
வருங்கால பலன்குறித்த ஆசிஉரைப்பேன்
வெய்யோன் ஆற்றல்பட அதிவெப்பமாக
4. ஆகவே இறங்கி புவிதன்னில்
அச்சுறுத்தும் பிணி சோடையாக
வகைபட தரும ஒழுக்க நெறிகொண்ட
வல்லமை நிறைந்த இந்தியா தமிழகம் தன்னில்
5. தன்னிலே சீர்கேடு தரும்வண்ணம்
தகாத போதை வஸ்து புழக்கம்
இன்னலென பெருகி சமூகத்தை
இழிவுபடுத்தும் நிலை காணநேரும்

6. நேருமைபட காக்கும் அதிகார
நிலமதனில் ஆளுமைகளும்
வருமுலகில் தடுக்கமுடியா தவிப்பும்
வருங்காலம் அதனுள்ளே சிக்குண்டு
7. சிக்குண்டு சிறுமை காணநேரும்
செப்பிட தேர்தல் களம் காணும்
பக்குவமிலா கழகங்கள் பலவும்
பரிதவிப்பே முடிவில் காணநேரும்
8. நேருமை கொண்ட செயல்வடிவாக
நீதி அரசர்களும் அதிகாரிகளும்
வருங்காலம் நல்ல தலைமுறையாக
வையகத்தில் வாழவைக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் ஆற்றலாகச் செயல்பட
வந்தநல் சிக்கல் பதுக்கல்
இன்னலான அனைத்து குற்றமும்
இருக்குமிடம் தெரியா அகன்றுமேவி
10.மேவியே உலகம் வியக்கவே
மொழிகுவேன் இந்தியா தமிழகம்
அவனியிலே வளர்ச்சியை நோக்கி
அரங்கமகான் வகுத்த நல்ல
11. நல்லதொரு ஆன்மீக அரசியல்களமாக
நம்பிக்கை மக்களிடை பெருகி
இல்லாமை இயலாமை எல்லாம்அகற்றி
ஏகாந்தம் பாதுகாப்புத்தரும் ஞானஆட்சி மலரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 11ம் நாள் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 18ம் நாள் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்கள் அறத்தின் வழியை பின்பற்றி தரும நெறிப்படி வாழ்ந்திடவே அவர்களுக்கு உண்மை ஆன்மீக ஞானவழியினை உபதேசித்து தர்மத்தின் வழியிலே வரும் அன்பர்களுக்கு வரத்தையும், ஞானத்தையும் அருளி வழி நடத்தி தர்மங்களை செய்திட செய்திடும் வள்ளல் ஞானியே கலியுகத்தின் வாழும் ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகரே! உமது அவதாரத்தின் பெருமையை உலகறிய கூறியே அகத்திய மகரிஷி யானும் வருங்கால பலனாக சோபகிருது வருடம் பங்குனி மாதம் **11**ம் நாள் **24.03.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் **18**ம் நாள் **31.03.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள பலன்களை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வெய்யோனாம் சூரியனும் இக்காலத்திலே அதிக உஷ்ணத்தை வெளிப்படுத்தி பூமியிலே அச்சுறுத்தும் வகையிலே வெப்ப நிலையை அதிகமாக்கி மக்களுக்கு வெப்ப சம்பந்தப்பட்ட நோய்களை உருவாக்கும் சூழலும் உள்ளதப்பா. தரும நெறியில் நடந்து வந்த இந்தியா தமிழகம் தற்சமயம் சீர்கேடு அடைந்து தகாத போதை வஸ்து பழக்கத்தில் வீழ்ந்து மக்களிடையே போதை பழக்கம் அதிகமாகி சமூகத்தை இழிவுபடுத்தும் நிலையையும் அடையக்கூடுமப்பா.

நேர்மையுடன் நடந்து மக்களை காக்கும் ஆளுமைகளும் வரும் காலத்திலே மக்களிடையே பரவும் இந்தவித போதை பழக்கத்தை தடுக்க முடியாமல் தவிக்க நேர்வதோடு அதன் பிடியுள்ளே ஆளுமையும் சிக்கி சிறுமைபட நேருமப்பா. தேர்தல் களம் காணும் சில அரசியல் கட்சிகளும் போதை பழக்கத்தின் செயல்பாடுகளிலே சிக்கி பிரச்சனைகளை சந்தித்து பரிதவிப்பான நிலையை முடிவில் காண நேருமப்பா.

நேர்மையே வடிவமாக கொண்ட நீதி அரசர்களும், அதிகாரிகளும் முனைப்புடன் செயல்பட்டு இனி வரும் காலம் நல்ல தலைமுறையாக உருவாகிட வேண்டும் வரும்கால தலைமுறையை போதையற்ற தலைமுறையாக வாழ வைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் உறுதியுடன் செயல்பட்டால் இதுவரை நடந்து வந்த சிக்கல்கள் நாட்டை விட்டு அகன்று ஓடும் பதுக்கல்கள் இல்லாத சூழல் உருவாகும், மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் எல்லாவித செயல்பாடுகளும், குற்றங்களும் நீதியின் முன் தலைவணங்கி இருக்கும் இடம் தெரியாமல் அகன்று நல்ல சூழல்

உருவாகுவதோடு உலகமே வியக்குமாறு இந்தியா, தமிழகம் உலக அரங்கிலே நன்மதிப்பை பெற்று வளர்ச்சி பாதையிலே விரைந்து முன்னேறிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவு நெறி கொள்கையாம் தர்ம நெறியினால் ஆன உண்மை ஆன்முக அரசியல் களமாக மாறி மக்களிடையே நம்பிக்கை பெருகி இல்லாமையும், இயலாமையும் மாறி வறுமையற்ற தன்னிறைவு பெற்ற மக்களுக்கு முழுமையான அச்சமற்ற முழுமையான பாதுகாப்பை தந்தருளும் ஞானஆட்சியும் நாட்டினில் இனிதே மலர்ந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–